

துணை மேயர் மு.மகேஷ்குமார், நேற்று (09.04.2025) தேனாம்பேட்டை மண்டலம், வார்டு122, நந்தனம் விரிவு 1ஆவது தெருவில் உள்ள விளையாட்டு மைதானத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, துணை ஆணையாளர்கள் வி. சிவ கிருஷ்ணமூர்த்தி, (பணிகள்), எம்.பி.அமித், (தெற்கு வட்டாரம்), மாமன்ற உறுப்பினர் கி. மதிவாணன், குடியிருப்பு சங்கப் பிரமுகர் அன்பகம் கலை உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அடல் பூஜல் யோஜனா திட்ட முன்னேற்றத்தை

# கண்காணிக்க அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழி முறைகள் என்ன?

## மக்களவையில் – கள்ளக்குறிச்சி எம்.பி. மலையரசன் கேள்வி!

புதுடெல்லி, ஏப். 10 -

கள்ளக்குறிச்சி மலையரசன் மக்களவையில் கழக உறுப்பினர் எழுப்பிய கேள்வி வருமாறு:

**மலையரசன் டி** : JAL SHAKTI அமைச்சர் மகிழ்ச்சியுடன் கூறுவாரா:

(அ) அடல் பூஜல் யோஜனா (ABY) பற்றிய விவரங்கள்;

(ஆ) ABYஐ செயல்படுத்துவதால் ஏற்படும் குறிப்பிட்ட நோக்கங்கள் மற்றும் எதிர்பார்க்கப்படும் விளைவுகளின் விவரங்கள் தமிழில் உள்ளடக்கப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கையுடன் நாடு:

(இ) நிலத்தடி நீர் மேலாண்மை முயற்சிகளுக்காக இதுவரை ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட மொத்த நிதியின் விவரங்கள் தமிழில் ABY இன் கீழ் நாடு;

(ஈ) உள்ளூர் சமூகங்களை, குறிப்பாக விவசாயிகளை ஈடுபடுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ள விதம்

தமிழ்நாட்டின் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ABY இன் கீழ் நிலத்தடி நீர் வளங்களின் நிலையான மேலாண்மை; மற்றும் (இ) கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ABY இன் முன்னேற்றத்தைக் கண்காணிக்க அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறை என்ன? நிலத்தடி நீர் பாதுகாப்பில் அதன் தாக்கத்தை மதிப்பிடுவதற்கு எடுக்கப்பட்ட/எடுக்கப்படும் நடவடிக்கைகளுடன் தமிழ்நாடு மற்றும்

நீர் பயன்பாட்டு நடைமுறைகள்?

பதில்

**ஜல சக்திக்கான இணையமைச்சர்**
**(ஸ்ரீ ராஜ் பூஷன் சௌத்ரி)**

(அ) இந்திய அரசு அடல் பூஜல் யோஜனாவை செயல்படுத்துகிறது, இது ஒரு மத்திய துறை திட்டமாகும், இதன் மொத்த செலவு 80 மாவட்டங்களில் உள்ள 229 நிர்வாகத் தொகுதிகள்/ தாலுகாக்களின் 8,203 நீர் பற்றாக்குறை கிராம பஞ்சாயத்துகளுக்கு (GPs) ரூ.6000 கோடி.

7 மாநிலங்களின் மாவட்டங்கள், அதாவது ஹரியானா, குஜராத், கர்நாடகா, மத்தியப் பிரதேசம்,



மகாராஷ்டிரா, ராஜஸ்தான் மற்றும் உத்திரம் 01.04.2020 முதல் 6 வருட காலத்திற்கு பிரதேசம். திட்டத்தின் முக்கிய அம்சங்களில் சமூக அடிப்படையிலானவை அடங்கும்

நிலத்தடி நீர் தரவு கண்காணிப்பு மற்றும் பகிர்வு, திட்டமிடல், திறன் மேம்பாடு & கவனம் செலுத்திய தகவல், கல்வி &

தொடர்பு (IEC) நடவடிக்கைகள்.

குறைப்பை இலக்காகக் கொண்ட நடவடிக்கைகளில் கவனம் செலுத்தும் முதல் வகையான திட்டம் இதுவாகும். நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்காக நுண்ணீர் பாசனம், பயிர் பல்வகைப்படுத்தல், குழாய்களைப் பயன்படுத்துதல் போன்ற நீர் பயன்பாடு. நீர் பட்ஜெட் மற்றும் முன்மொழியப்பட்ட தேவைப் பக்கத்தைப் பற்றிய விவரங்களைக் கொண்ட GP வாரியான நீர் பாதுகாப்புத் திட்டங்கள் (WSPs) நுண் நீர்ப் பாசனம், பயிர் பல்வகைப் படுத்தல், குழாய் இணைப்புகளைப் பயன்படுத்துதல் போன்ற தலையீடுகள் மற்றும் விநியோக பக்க தலையீடுகள் தடுப்பணைகள், பண்ணை குளங்கள், நீர் ரீசார்ஜ் தண்டுகள் மற்றும் பிற செயற்கை நீர் ரீசார்ஜ் / நீர் பாதுகாப்பு கட்டமைப்புகள் போன்றவை. நிலத்தில் ஏற்படும் சரிவைத் தடுக்கும் நோக்கத்துடன், தற்போதைய திட்டங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. நீர் மட்டம்.

(ஆ) முதல் (இ) இந்தத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படவில்லை.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.

### உச்சநீதிமன்றத் தீர்ப்பு ஆளுநரின் ஆணவத்தின் மீது வீழ்ந்த சம்மட்டி அடியாகும்!

# மாநில உரிமைகளை மீட்பதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் விண்ணளவு உயர்ந்துள்ளார்!

## விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை!

சென்னை, ஏப். 10 -

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட 10 மசோதாக்களை ஒப்புதல் அளிக்காமல் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் நீண்ட காலம் நிறுத்தி வைத்தும், பின்னர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்ததும் சட்டவிரோதம் எனவும் அரசியல் சாசனத்திற்கு எதிரானது எனவும் உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பானது ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களின் தான்தோன்றித்தனமான ஆணவத்திற்கு கிடைத்த சம்மட்டி அடியாகும்.

தன்மானமும், சுயமரியாதையும் கிஞ்சித்தளவேனும் ஆளுநர் ஆர்.என். ரவி அவர்களுக்கு இருக்குமேயானால் அவர் உடனடியாக ராஜ்பவனை விட்டு வெளியேற வேண்டும். அல்லது அவரை நியமனம் செய்



தவர்கள் வெளியேற்றிட வேண்டும்.

ஆர்.என்.ரவி அவர்கள் ஆளுநராக பொறுப்பேற்ற நாள் முதல் தமிழ்நாடு அரசோடு தொடர்ந்து மோதல் போக்கை கடைபிடித்து வந்துள்ளார். அரசியல் சட்டத்தின் மீது உறுதி எடுத்துக் கொண்ட அவர் அரசியல் வாதியை போன்று சனாதனம் பேசுவது, மொழிப் பிரச்சினையில் மோதல் போக்கை உருவாக்குவது, தமிழ்நாட்டின் பெயரையே தமிழகம் என மாற்ற முயற்சிப்பது இப்படி அடாவடித்தனத்தின் உச்சத்திற்கு சென்றார். தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் வகையில் சட்டப்பேரவையில் நிறைவேற்றுகிற மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க மறுத்து வந்தார்.

இந்த நிலையில்தான் தமிழ்நாடு அரசு பல்கலைக்கழகங்களில் வேந்தர் நியமனம் சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட 10 மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஆண்டு கணக்கில் கிடப்பில் போட்டு இறுதியாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தார். இதனை எதிர்த்து தமிழ்நாடு அரசும், முதல்வர் சட்டப் போராட்டத்தை தொடங்கினர். அந்தப் போராட்டத்தில் உச்சநீதிமன்றம் நேற்று முன்தினம் (08.04.2025) அதிரடியான வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பினை வழங்கி உள்ளது.

ஆளுநர் அமைச்சரவையின் ஆலோசனைப்படி நடக்க வேண்டியவர். அவருக்கென்று எந்த தனி அதிகாரம் எதுவுமில்லை. அவருடைய செயல்பாடுகள் சட்டத்தை மீறியதாகவும், உள்நோக்கம் கொண்டதாகவும் உள்ளது. இவரது போக்கு அரசியல் சாசனத்திற்கு எதிரானது என உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது. இந்த தீர்ப்பு தமிழ்நாடு முதலமைச்சருக்கு கிடைத்த மகத்தான வெற்றியாகும். மொழி பிரச்சினையாக இருந்தாலும், சமூகநீதி பிரச்சினை யாக இருந்தாலும், தொகுதி வரையறை உள்ளிட்ட மாநில உரிமைகள் சார்ந்த எந்த பிரச்சினையாக இருந்தாலும் அதில் இந்தியாவிற்கு தலைமை தாங்கக்கூடிய அளவிற்கு செயல்படக்கூடிய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றைக்கு ஆளுநர்களின் நடவடிக்கை குறித்தும், இந்தியாவிற்கான ஒரு அரிய தீர்ப்பை பெற்றுக்கொடுத்து, விண்ணளவிற்கு உயர்ந்து நிற்கிறார். இந்தத் தீர்ப்பின் மூலம் இந்திய இறையாண்மை, அரசியல் அமைப்பு சட்டம், தேச ஒற்றுமை பாதுகாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் மசோதாக்களை ஆளுநர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தது சட்ட விரோதம் மட்டுமல்ல, அரசியல் சாசனத்திற்கு எதிரானது என்று கூறி அதை ரத்து செய்து, மசோதாக்களுக்கு உச்ச நீதிமன்றம் ஒப்புதல் அளித்ததன் மூலம் ஆளுநர் ஜனாதிபதியை அவமதிப்பிற்கு உள்ளாக்கி விட்டார்.

ஆளுநர்களுக்கு மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு காலக்கெடுவை உச்சநீதிமன்றம் நிர்ணயித்துள்ளது வரவேற்கத் தக்கதாகும். இது இந்தியா முழுவதும் உள்ள மாநிலங்களுக்கு ஆளுநரின் செயல்பாடுகள் குறித்து ஒரு தெளிவான விளக்கத்தை, புரிதலை அளித்துள்ளது.

ஆளுநருக்கு அரசியல் சாசனப் பிரிவு 200ன் கீழ் எந்த தனிப்பட்ட அதிகாரமும் இல்லை என்பதை தெளிவுபடுத்தி உள்ளது. இந்த மகத்தான தீர்ப்பு ஜனநாயகத்தை, கூட்டாட்சி தத்துவத்தை வளர்த்தெடுப்பதற்கான ஒரு வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பாகும்.

இவ்வாறு பொன்குமார் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# குமாரபாளையத்தில் வடக்கு நகர கழக சார்பில் நீர் மோர் பந்தல்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி திறந்து வைத்தார்!

நாமக்கல், ஏப்.10-

நாமக்கல் மேற்கு மாவட்டம் குமாரபாளையத்தில் வடக்கு நகர தி.மு.க. சார்பில் நீர் மோர்பந்தல் திறப்பு விழா நடந்தது. வடக்கு நகர பொறுப்பாளரும், நகராட்சி தலைவருமான விஜய்கண்ணன் தலைமை வகித்தார். பள்ளிபாளையம் பிரிவு பகுதியில் அமைக்கப்பட்ட நீர்மோர் பந்தலை மாவட்டக் கழகப். செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி திறந்து வைத்தார். பொதுமக்களுக்கு இளநீர், தர்பூசணி, அன்னாசி, முலாம்பழ ஜூஸ், நீர்மோர் ஆகியன வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் நகராட்சி துணை தலைவர் வெங்கடேசன், தலைமை செயற்குழு உறுப்பினர் செல்வராஜ், மாவட்ட பொருளர் ராஜாராம், முன்னாள் நகர செயலர் செல்வம் உள்பட பலர் பங்கேற்றனர்.

முன்னதாக குமாரபாளையத்தில் வடக்கு மற்றும் தெற்கு நகர தி.மு.க. சார்பில் வரவேற்பு வழங்கப்பட்டது. நகராட்சி தலைவர் விஜய்கண்ணன், தெற்கு நகர பொறுப்பாளர் ஞானசேகரன், நகராட்சி துணை தலைவர் வெங்கடேசன், தலைமை செயற்குழு உறுப்பினர் செல்வராஜ், மாவட்ட பொருளர் ராஜாராம், முன்னாள் நகர செயலர் செல்வம் மற்றும் கழக நிர்வாகிகள் வார்டு செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



மாதவரம் வடக்கு பகுதி திமுக இளைஞரணி சார்பில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா 15 வது வட்டம் மணலி புதுநகர் பகுதியில்,மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், 15 வது வட்ட செயலாளர் கே.அங்குசாமி ஆகியோர் முன்னிலையில், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஏ. விஜயன் ஏற்பாட்டில், கழக இளைஞரணி துணை செயலாளர் தூத்துக்குடி எஸ். ஜோயல் திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர் மோர், தர்பூசணி, வெள்ளரிக்காய் ஆகியவற்றை வழங்கினார். சி. எஸ். எஸ். டி. சீனிவாசன், கேபிள் த.வே. கணேசன் டி. ஜி. ஆர். மணிவண்ணன், வட்ட நிர்வாகிகள் ராஜேந்திரன், பக்தவச்சலம், ரவிச்சந்திரன், மனோகரன், கண்ணன், எல்ல முத்து, வசிமுகமது, பாலன், ர.விஜய் ஆனந்த், வழக்கறிஞர் எம். என்.அஜய் தென்னவன், வி. சிவப்பிரகாஷ், டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், ஜி. ராஜேஷ் கண்ணன், அ.சாந்தகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

# மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களே...

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களே புதிய பாம்பன் பாலத்தை திறந்து வைத்து ரயில் போக்குவரத்தை தொடங்கி வைத்ததற்கு நன்றி. நன்றி என்பது தமிழர்களின் பாரம்பரிய பண்பாடு. ஆனால், பிரதமர் அவர்களே நீங்கள் அங்கு பேசிய உரையை நீங்களே ஒரு முறை கேட்டீர்களானால் இவ்வளவு தரம் தாழ்ந்தா பேசியிருக்கிறோம் என்று நீங்களே வெட்கப்படுவீர்கள். பிரதமர் பதவி என்பது இந்தியாவில் ஒரு கௌரவமான ஒரு உயர்ந்த பதவி. ஜவஹர்லால் நேரு, லால் பகதூர் சாஸ்திரி, காந்தி, மொரார்ஜி தேசாய், ராஜீவ் காந்தி, வி பி சிங், நரசிம்மராவ், அடல் பிகாரி வாஜ்பாய் இப்படி பல பெரியவர்கள் அந்தப் பதவிக்கு பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

நீங்கள் அந்த மேடையில் பேசும்போது உங்கள் சக அமைச்சர்கள் பெயரை மட்டும் சொல்லிவிட்டு உங்களை வரவேற்ற தமிழக அமைச்சர்கள் அந்தத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் பெயரைக் கூட சொல்லாமல் தவிர்த்தீர்கள். எல்லா மதங்களும் இந்து மதம் உள்பட சகிப்புத்தன்மையை முதன்மைப்படுத்தி இருக்கிறது. பிரதமர் என்பவர் பாரபட்சமில்லாமல் எல்லோரையும் சமமாக நடத்த வேண்டும் என்பதுதான் பாரம்பரிய வரலாறு. உங்களைப் பொறுத்தவரை வரலாறு பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஒரு குறைந்தபட்ச அக்கறை கூட இல்லாதவர் என்பதற்கு உதாரணம் உங்களின் அன்றைய மேடைப்பேச்சு உதாரணம்.

அழுகை அரசியல் பற்றி நீங்கள் பேசுகிறீர்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு சுயமரியாதை இயக்கம். அது என்றுமே அநீதிகளை எதிர்த்து குரல் தருமே தவிர அதற்கு அழுகை அரசியல் எல்லாம் தெரியாது. பாராளுமன்றத்தில் திமுக மக்கள் பிரச்சினைகளுக்கு எப்படி எல்லாம் குரல் கொடுக்கிறார்கள், ஆதாரப்பூர்வத்துடன் ஆணித்தரமாக எப்படி எல்லாம் பேசுகிறார்கள் என்



**எஸ். ரகுபதி**
சட்ட அமைச்சர்

பதை நீங்கள் பாராளுமன்றத்திற்கு தினம் வருகின்ற சபாநாயகரை கேட்டு தெரிந்து கொள்ளுங்கள். ஏனென்றால் பாராளுமன்றம் கூட உங்களுக்கு பொழுது போக்கு மன்றம் தான் எப்போதாவது வந்து வேடிக்கை பார்த்துவிட்டு போவீர்கள்.

அந்த மேடையில் அது அரசு விழா என்றாலும், உங்கள் சக அமைச்சர் ஜெய் ஸ்ரீ ராம் என்று முழக்க மிட்டார்கள். நீங்களும் ராமநவமி என்று பெருமை பேசினீர்கள். ராமர் உண்மையா பொய்யா என்று விவாதத்திற்கு நாங்கள் வரவில்லை. ஆனால், ராமர் எல்லோரும் ஓர் குலம் என்று ஏற்றுக்கொண்டு தான் மீனவ வகுப்பை சேர்ந்த குகனை தன்னுடைய சகோதரராக பாவித்து குகனுடன் ஐவரானோம் என்று கம்பராமாயணத்தில் கம்பர் குறிப்பிட்டிருக்கிறார். அப்படிப்பட்ட குகன் சமுதாயமான மீனவர் சமுதாயம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று தான் அவர்களுக்கு இலங்கை கடற்படையினால் ஏற்படும் அச்சுறுத்தலை நிறுத்துமாறு இலங்கை அதிபரை கேட்டுக்கொள்ளச் சொல்லி எங்கள் தளபதி உங்களுக்கு கடிதம் எழுதினார்.

ஆனால் அதைக் கூட நீங்கள் அரசியல், ஆக்க சில தலைவர்கள் தமிழில் கையெழுத்து போடாமல் ஆங்கிலத்தில் கையெழுத்து போடுகிறார்கள் தமிழ் கையெழுத்து போடுங்கள் என்று அறிவுரை என்ற பெயரில் ஏதோ சொல்கிறீர்கள். நீங்கள், நான் குஜராத்தி என்று பெருமையாக பேசுவீர்கள். ஆனால், நீங்கள் மேடையில் பேசுவது குஜராத்தி மொழியில் அல்ல, இந்தியில் தான். உங்களுடைய தாய்மொழி பற்றுக்கு இதை விட உதாரணம் தேவையில்லை நீங்களே கடிதங்களில் இந்தியில் தான் கையெழுத்து போடுகிறீர்கள், குஜராத்தி மொழியில் அல்ல. மொழி உணர்வு பற்றி எங்களுக்கு பாடம் எல்லாம் சொல்லித்தர தேவையில்லை.

முதல்வர் ஆங்கிலத்தில் கடிதம் எழுதினார். ஆங்கிலத்தில் கையெழுத்து போடுவது என்பது ஒரு மரபு. அரசாணைகள் தமிழில் இருக்க வேண்டும். அரசு ஊழியர்கள் தமிழில் கையெழுத்து போட வேண்டும். எல்லா அலுவலக முகப்பிலும் தமிழ் வாழ்க என்ற பெயர் பலகை வைக்க வேண்டும் என்றெல்லாம் எங்கள் தமிழ் உணர்வை எப்படி எல்லாம் வெளிப்படுத்தி இருக்கிறோம் என்பதற்கு உங்கள் சான்றிதழ் எல்லாம் எங்களுக்கு தேவையில்லை. திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சிக்கு வந்ததும் செய்த முதல் வேலையே சென்னை மாகாணத்தை தமிழ்நாடு என்று பெயர் மாற்றியது தான்.

மாநிலத்துக்கு மூன்று மடங்கு நிதி. ரயில்வேக்கு ஏழு மடங்கு அதிக நிதி என்று இங்கே வரும் எல்லா மத்திய அமைச்சர்களும் ஒரு கதையை அடித்து விடுவார்களே அதையே நீங்களும் வழக்கப்படி பேசிவிட்டு போய் விட்டீர்கள். ஆனால் இன்னும் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை திறந்த பாடு இல்லை. ரயில்வே திட்டங்களைப் பற்றி பெருமை பேசும் பிரதமர் ரயில் நிலையங்களை போய் பார்த்தால் தெரியும் இன்னும் பணி நடந்து கொண்டே இருக்கிறது எப்போது முடியும் என்று தெரியவில்லை.

தமிழகத்தில் லட்சக்கணக்கான சிறு விவசாயிகள் பிரதமர் கிஷான் திட்டத்தில் ரூ. 12,000 கோடி பலன் பெறுகிறார்கள் என்று ஒரு புள்ளி விவரத்தை அடித்து விட்டிருக்கிறீர்கள். ஆனால் பிரதமர் அவர்களே விவசாயிகள் தங்கள் கோரிக்கைக்காக இன்றும் டெல்லியை நோக்கி பேரணி நடத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் பிரச்சனை இன்னும் தீரவில்லை. தளபதி விவசாயி களுக்கு என்று தனி நிதிநிலை அறிக்கை என்று கரிசனம் காட்டி அவர்களை பாதுகாத்து வருகிறார். விவசாயிகளுக்கு மத்திய அரசு என்ன செய்தது என்பதை மாநிலங்கள் அவையில் ஒரு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக மத்திய விவசாயத் துறை அமைச்சர் சொன்ன பதிலே ஆதாரம். மராட்டிய மாநிலத்தில் சென்ற முறை பா.ஜ.க. கூட்டணி ஆட்சி இப்போதும் அது தொடர்கிறது. மகாராஷ்டிராவின் மாராத்வாடா மாவட்டத்தில் மூன்று மாதத்தில் 16 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். கடந்த மூன்று ஆண்டுகளில் 3090 விவசாயிகள் அந்த மாவட்டத்தில் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று விவசாய அமைச்சர் சிவராஜ் சௌகான் பதில் சொல்லி இருக்கிறார். மகாராஷ்டிராவில் இரட்டை எஞ்சின் ஆட்சி நடக்கிறது. அதாவது மத்தியிலும் சரி அந்த மாநிலத்திலும் சரி பா.ஜ.க. ஆட்சி அங்குதான் இந்த தற்கொலை. புள்ளி விவர புலிகளான நீங்கள் இது பற்றி கேட்டால் என்ன பதில் சொல்வீர்கள் ?

மருத்துவ படிப்பை தமிழில் கொண்டுவர வேண்டும் ஏற்கனவே உங்களது சகா அமித்ஷா சொன்னதை நீங்கள் தற்சமயம் வழி மொழிந்திருக்கிறீர்கள். தமிழ்நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் தமிழர்கள் மட்டுமல்லாமல் பல்வேறு மாநிலம் மற்றும் பல்வேறு அண்டை நாட்டைச் சேர்ந்தவர்கள் படித்து வருகிறார்கள். தமிழகத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிகளின் தரம் அந்த அளவுக்கு உயர்ந்து இருக்கிறது என்பது தான் காரணம். வட மாநிலங்களில் ஆரம்பக் கல்வியை கேள்விக்குறியாக இருக்கும்போது உண்மையில் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் உள்ள வடமாநில இளைஞர்கள் தேடி வருவது தமிழகம் தான். எனவே எப்போது தமிழைப் பயன்படுத்த வேண்டும் என்பதும், எங்கு எங்கு பயன்படுத்த வேண்டும் என்பது எல்லாம் எங்களுக்கு தெரியும். நீங்கள் எங்களுக்கு பாட நடத்த வேண்டாம்.

### டபிள்யூ.பி.ஏ சௌந்திரபாண்டியனார் மணி மண்டபம்!

# தமிழ்நாடு முதல்வருக்கு சமத்துவ மக்கள் கழகம் பாராட்டு!

## எர்ணாவூர் நாராயணன் அறிக்கை!

சென்னை, ஏப்.10-

சமத்துவ மக்கள் கழக நிறுவனத் தலைவர் எர்ணாவூர் ஏ.நாராயணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

டபிள்யூ.பி.ஏ.சௌந்திர பாண்டியன் நீதிக்கட்சியின் முன்னணித் தலைவர்களுள் ஒருவராகவும் சுயமரியாதை இயக்கத்தின் ஆதரவாளராகவும் திகழ்ந்தவர். 1920 களிலும் 30களிலும் நாடார் மகாஜன சங்கத்தின் முக்கிய தலைவர்களுள் ஒருவரான சௌந்திரபாண்டியனார், 1920ம் ஆண்டு தமிழக சட்டமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு 1937 வரை தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தார்.இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்கு நிதியுதவி செய்தவர். நாடார் சமூகத்தில் சுயமரியாதைக் கருத்துகளைப் பரப்பவும், சுய மரியாதைத் திருமணங்களைப் பிரபலப் படுத்தவும் உறுதுணையாக இருந்தவர். சென்னை தி. நகரின் பாண்டி பசார் இவரது நினைவாகப் பெயரிடப்பட்டதே ஆகும்.

1921ஆம் ஆண்டில் நாடார் வங்கியைத் தொடங்க பெருமுயற்சி எடுத்தார்.

சட்டமன்ற கூட்டத் தொடரில் வீட்டு வசதி வாரிய மானிய கோரிக்கையின் மீது விவாதங்களில் ஆலங்குளம் சட்டமன்ற உறுப்பினர் மனோஜ் பாண்டியன் டபிள்யூ.பி.ஏ.சௌந்தர பாண்டியனாருக்கு மணி மண்டபம் கட்ட தமிழக முதல்வர் அவர்களை வலியுறுத்தினார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக திராவிட இயக்கத்தின் தலைவர் சௌந்தர பாண்டியனார் அவர்களுக்கு நிச்சயம் மணிமண்டபம் அமைக்கப்படும் என உறுதி அளித்தார். கடந்த வாரம் திருச்சியில் அமைய நூலகத்திற்கு பெருந்தலைவர் பெயர் சூட்டி பெருந்தலைவரை பெருமைப்படுத்தினார். தமிழ்நாடு முதல்வர் அவர்கள் ஆட்சியில் தலைவர்களை பெருமைப்படுத்தவும், கௌரவப்படுத்தவும் முக்கியத்துவம் தரும் வகையில் சிறப்பான ஆட்சி செய்து வருகிறார்.இன்று டபுள்யு.பி.எஸ் சௌந்தர பாண்டியனருக்கு மணிமண்டபம் அறிவித்ததற்கு நாடார் சமுதாயத்தின் சார்பாகவும்,



சமத்துவ மக்கள் கழகத்தின் சார்பாகவும் வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



சென்னை தெற்கு மாவட்ட திமுக மாணவர் அணி பகுதி அமைப்பாளர்கள் – பகுதி துணை அமைப்பாளர்கள் கூட்டம் 07.04.2025 அன்று சைதாப்பேட்டை பஜார் சாலையில் அமைந்துள்ள ”சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பா.அருண்குமார் தலைமையில் மாநில மாணவர் அணி துணை செயளாலர் சென்னை மண்டல பொறுப்பாளர் தமிழ் க.அமுதராசன் முன்னிலையில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஆ.ஈஸ்வரமூர்த்தி, ஜெ.சீனிவாசன், எஸ்.கே.தமிழ்வேல் கவி, எஸ்.விஷ்ணு டி.எஸ்.பி. தமிழ்செல்வன், எஸ்.யமுனாஸ்ரீ உளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.